

சென்னை – அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அரியலூர் மாவட்ட தமிழ் மாநில, காங்கிரஸ் தலைவர் பனங்கூர் எஸ்.ஜெயராமன் உள்பட 25 பேர், அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அரியலூர் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தார்கள்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (23.3.2026) மாலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் புதுக்கோட்டை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

### ‘ஸ்டாலின் ஸ்டேட்மெண்டில்’ நான் உறுதியளித்தபடி

# பசுமைப் பரப்பு - சீரான நடை பாதைகள் - அழகிய பூங்காக்கள் நிறைந்த மாநகரங்களை தமிழ்நாடெங்கும் உருவாக்கிக் காட்டுவோம்!

### வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!



சென்னை, மார்ச் 25 -

கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த வலைதளப்பதிவொன்றில், “ஸ்டாலின் ஸ்டேட்மெண்டில் நான் உறுதியளித்தபடி பசுமைப்பரப்பும், சீரான நடைபாதைகளும், அழகிய பூங் காக்களும் நிறைந்த மாநகரங்களைத் தமிழ்நாடெங்கும் உருவாக்கிக் காட்டு வோம்!” எனச் சூளுரைத்துள்ளார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின், அவ் வலைதளப் பதிவு வருமாறு:-

**தி.மு.க. என்றாலே வளர்ச்சி; தி.மு.க. என்றாலே நவீன உள்கட்டமைப்பு! சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் புதிய மேம்பாலங் கள் ஒருபுறம், பொதுப்போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் புதிய, தர மான பேருந்துகள் மற்றும் டிஜிட்டல் பயணச்சீட்டு முறைகள் மற்றொரு புறம்!**

**‘ஸ்டாலின் ஸ்டேட்மெண்டில்’ நான் உறுதியளித்தபடி 2030இல் அதிகரிக்கப் பட்ட பசுமைப் பரப்பும், சீரான நடை பாதைகளும், அழகிய பூங்காக்களும் நிறைந்த மாநகரங்களைத் தமிழ்நாடெங் கும் உருவாக்கிக் காட்டுவோம்!**

**Vote For DMK**

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக்கு 5 தொகுதிகள்!



நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழுச் செயலாளர் பெ.சண்முகம் அவர்களும் இன்று (23–3–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாட்டில் 5 (ஐந்து) சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

(பெ. சண்முகம்)
செயலாளர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு மாநிலக் குழு

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.




கழகத் தலைவரும், – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (23.3.2026) மாலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் புதுக்கோட்டை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டில் AI சுகாதார மையம் எப்போது நிறுவப்படும்?

## மக்களவையில் — தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 25 -

தமிழ்நாட்டின் சுகாதார நிறுவனங்கள், ஒன்றிய அர சின் AI முன்னோடித் திட் டங்களில் சேர்க்கப்பட்டுள் ளனவா? என்றும் ‘செயற்கை நுண்ணறிவு சுகாதார சிறப்பு மையத்தை’ தமிழ் நாட்டில் நிறுவ ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவ டிக்கை என்ன என்றும் மக்க ளவையில் ஒன்றிய சுகாதா ரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் வருமாறு: -

தமிழ்நாட்டின் சுகாதார நிறுவனங்கள், சர்க்கரை நோயால் கண்களில் ஏற்ப டும் பாதிப்புகளை கண்ட றிய உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு செயலியான மதுநேத்ரா AI, CDSS (Clinical Decision Sup port System), CA-TB, கண்கா ணிப்பு அமைப்புகள் மற் றும் குரல்வழி உரையாக்கம் போன்ற AI முன்னோடித் திட்டங்களில் சேர்க்கப் பட்டுள்ளனவா? சேர்க்கப் பட்டிருந்தால் அதன் விவ ரங்கள் என்ன?

கடந்த 5 ஆண்டுகளில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட் டல் இயக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு சுகாதார முன்னெடுப்பு களின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி யுள்ளதா? அப்படியா னால், அதன் விவரங்கள் என்ன? மானியம் முன் மொழியப்பட்டிருந்தால் மாநில வாரியாக அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் பணியா ளர் பற்றாக்குறை மற்றும் ஒன்றிய அரசின் சேவை கள், கிராமப்புற மக்களுக் குச் சென்றடைவதில் உள்ள குறைகளையும் நிவர்த்தி செய்ய செயற்கை நுண்ணறிவைப் பயன்ப டுத்துவதை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்?

தேசியத் தளங்களில் தர வுப் பாதுகாப்பு, ஒப்புதல், தமிழ் மொழி இணக்கத் தன்மை மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) பொறுப்பு டைமை ஆகியவற்றிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளனவா? அவ்வாறெ னில், அது குறித்த விவரங் கள் என்ன?

தமிழ்நாட்டில் ‘செயற்கை நுண்ணறிவு சுகாதார சிறப்பு மையத்தை’ (Al Health care Centre of Excellence) நிறுவ ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா? திட்டமிருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன? என்று தயாநிதி மாறன் கேள்வி எழுப்பி யுள்ளார்.



தூத்துக்குடி மற்றும் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் ஆலோசனை கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பெ.கீதாஜீவன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், விளாத்தி குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் ஆகியோர் கலந்து கொண்டு 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றிடும் வகையில் கழக நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து உரையாற்றினார்கள். நிகழ்வில் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்டப் பொருளாளர் சுசி. ரவீந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொதுக்குழு உறுப்பினர் கோட்டு ராஜா, ஒன்றியச் செயலாளர்கள் செல்வராஜ், மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், காசி விஸ்வநாதன், சின்னமாரி முத்து, நவநீதக் கண்ணன், ராமசுப்பு, அன்பு ராஜன், இமானுவேல், மாநகராட்சி தெற்கு மண்டல செயலாளர் பாலகுருசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அண்ணா அறிவாலயத்தில் கழக அயலக அணி நிர்வாகிகளுடன் தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.